

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் அவர்களின் தலைமையில் முதன்மை செயலாளர்/தொழிலாளர் ஆணையர் முன்னிலையில் நேற்று 23.07.2024 அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்து தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்களின் திறனாய்வு கூட்டம் சென்னை டி.எம்.எஸ் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

### அமைப்புசாரா தொழிலாளர்கள் நலவாரியம் சார்பில்

# 19.16 லட்சம் தொழிலாளர்களுக்கு நலத் திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வி.கணேசன் தகவல்!

சென்னை, ஜூலை 24-

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்கள் மூலம் 19,16,292 தொழிலாளர்களுக்கு ரூ. 16,64,70,99,480 நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன என்று அமைச்சர் சி.வி. கணேசன் அறிவித்துள்ளார்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் தலைமையில் முதன்மை செயலாளர்/ தொழிலாளர் ஆணையர் அவர்கள் முன்னிலையில் நேற்று (23.07.2024)அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களின் செயல்பாடுகள் குறித்து தொழிலாளர் துறையின் உயர் அலுவலர்களின் திறனாய்வு கூட்டம் சென்னை டி.எம்.எஸ் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது.

தொழிலாளர் நலத்துறையின் கீழ் செயல்பட்டு வரும் 20 அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் 22.07.2024 அன்றுள்ளவாறு மொத்தம் 44,61,486 தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்து பயன் பெற்று வருகின்றனர்.

மாவட்ட அளவில் வாரிய பணிகளான பதிவு, புதுப்பித்தல், கேட்பு மனுக்கள் பெறுதல் மற்றும் ஒப்பளிப்பு செய்து பணப்பயன்களை தொழிலாளர்களின் வங்கி கணக்கிற்கு நேரடியாக அனுப்புதல் ஆகிய பணிகள் 40 தொழிலாளர் உதவி ஆணையர்களால் (சமூக பாதுகாப்பு திட்டம்) இணையதள வாயிலாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் பதிவு செய்த தொழிலாளர்களுக்கு கல்வி, திருமணம், மகப்பேறு, கண் கண்ணாடி, ஓய்வூதியம், விபத்து மரணம், இயற்கை மரணம் உள்ளிட்ட பல்வேறு நலத்திட்ட உதவித் தொகைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

கடந்த மூன்று ஆண்டுகளில் மட்டும் அமைப்புசாரா தொழிலாளர்கள் நல வாரியங்களில் புதியதாக 16,78,138 தொழிலாளர்கள் உறுப்பினர்களாக பதிவு செய்துள்ளனர். மேலும், 19,16,292 தொழிலாளர்களுக்கு ரூ.16,64,70,99,480 நலத்திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

குறிப்பாக கடந்த 08.06.2024 அன்று அமைச்சர் அவர்களின் தலைமையில் பணித்திறனாய்வு கூட்டம் நடைபெற்றது.

அக்கூட்டத்தில் மக்களவை தேர்தல் நடத்தை விதிமுறைகள் காரணமாக நிலுவையில் உள்ள கேட்பு மனுக்களை விரைந்து முடிக்குமாறு அறிவுறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து 3,71,922 தொழிலாளர்களுக்கு ரூ. 2,16,09, 70,623 நலத்திட்ட உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

பிற துறைகளுடன் சரிபார்ப்பு பணிகளுக்காக நிலுவையில் உள்ள கேட்பு மனுக்களையும், விவரங்களை விரைவில் பெற்று கேட்பு மனுக்களை காலதாமதமின்றி விரைந்து முடிக்க அலுவலர்களுக்கு அமைச்சர் அறிவுறுத்தினார்.

### முதல் முறையாக ஆன்லைனில் கட்டட அனுமதி பெறும் திட்டம்!

# நடுத்தர மக்களின் வீடு கட்டும் கனவு எளிதில் நனவாகும்!

## 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு !

சென்னை, ஜூலை 24-

தமிழ்நாட்டில் முதல் முறையாக தொடங்கப்பட்டுள்ள ஆன்லைனில் கட்டட அனுமதி பெறும் திட்டமானது, நடுத்தர மக்களின் வீடு கட்டும் கனவு எளிதில் நனவாக வரப்பிரசாதமாக அமைந்துள்ளது என்று 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் பாராட்டு தெரிவித்துள்ளது.



தினகரன்

ஜூலை 23, 2024 செவ்வாய்க்கிழமை

வரப்பிரசாதம்

தமிழகத்தில் முதல் முறையாக ஆன்லைனில் உடனடியாக கட்டிட அனுமதி பெறும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்துள்ளதால் நடுத்தர மக்களின், வீடு கட்டும் கனவு எளிதில் நனவாக வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் கட்டிட அனுமதிக்காக ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது. அதேபோல், உள்ளாட்சி அமைப்புகளிலும் ஆன்லைனில் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்தாண்டு அக்.2ம் தேதி முதல் ஊராட்சிகளில் கட்டிட அனுமதிக்கு ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதையொட்டி பல்வேறு சலுகைகளையும் தமிழக அரசு அறிவித்தது.

தளப்பரப்பு குறியீட்டிலும், பணிமுடிப்பு சான்றிதழ் பெறுவதிலும் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. தமிழக அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகளின் அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்துக்கு பணி நிறைவு சான்றிதழ் பெற்றால்தான் மின்சாரம், குடிநீர், கழிவுநீர் இணைப்புகளை பெற முடியும்

இது குறித்து 23.07.2024 தேசிய 'தினகரன்' நாளேடு தலையங்கத்தில் கூறப்பட்டுள்ளதாவது:-

தமிழகத்தில் முதல் முறையாக ஆன்லைனில் உடனடியாக கட்டிட அனுமதி பெறும் திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தொடங்கி வைத்துள்ளதால் நடுத்தர மக்களின், வீடு கட்டும் கனவு எளிதில் நனவாக வரப்பிரசாதமாக அமைந்துள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தில் கட்டிட அனுமதிக்காக ஆன்லைனில் விண்ணப்பிக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டு, செயல்பாட்டில் உள்ளது. அதேபோல், உள்ளாட்சி அமைப்புகளிலும் ஆன்லைனில் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் நடைமுறை கொண்டு வரப்பட்டுள்ளது. கடந்தாண்டு அக்.2ம் தேதி முதல் ஊராட்சிகளில் கட்டிட அனுமதிக்கு ஆன்லைனில் மட்டுமே விண்ணப்பிக்கும் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. இதையொட்டி பல்வேறு சலுகைகளையும் தமிழக அரசு அறிவித்தது.

தளப்பரப்பு குறியீட்டிலும், பணிமுடிப்பு சான்றிதழ் பெறுவதிலும் சலுகைகள் அறிவிக்கப்பட்டன. தமிழக அரசின் ஒருங்கிணைந்த வளர்ச்சி கட்டிட விதிகளின் அடிப்படையில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடத்துக்கு பணி நிறைவு சான்றிதழ் பெற்றால்தான் மின்சாரம், குடிநீர், கழிவுநீர் இணைப்புகளை பெற முடியும் என்ற நிலை உள்ளது. இதில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது. அதன்படி, அதிகபட்சம் 8 வீடுகள் அல்லது 750 சதுர மீட்டருக்குள் உள்ள கட்டிடங்களுக்கு பணி நிறைவு சான்றிதழ் பெற அவசியம் இல்லை. உயரமில்லா கட்டிடங்களுக்கான அதிகபட்ச உயரம் 12 மீட்டரில் இருந்து 14 மீட்டராக உயர்த்தப்பட்டது. அதேபோல், 300 சதுர மீட்டர் வரையும், உயரத்தில் 14 மீட்டருக்கு மிகாமலும் கட்டப்படும் வணிக கட்டிடங்களுக்கும் பணி நிறைவு சான்றிதழ் வேண்டாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் கடந்த பிப்ரவரி மாதம் தாக்கல் செய்யப்பட்ட தமிழக அரசின் பட்ஜெட்டில் 2,500 சதுர அடி வரை கட்டப்படும் குடியிருப்பு கட்டுமானத்துக்கு கட்டிட அனுமதி தேவையில்லை. பணி முடிவு சான்று பெற தேவையில்லை என்று அறிவிக்கப்பட்டுள்ளது. பட்ஜெட் அறிவிப்பை செயல்படுத்தும் வகையில், தமிழகத்தில் முதல் முறையாக கட்டிட அனுமதியை ஆன்லைனில் உடனடியாக வழங்கும் திட்டத்தை நேற்று தலைமைச் செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில், முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் ரூ.541.32 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 4,184 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலி காட்சி வாயிலாக முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைத்தார். தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ரூ.382.84 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 1459 தமிழ்நாடு அரசு அலுவலர்களின் வாடகை குடியிருப்புகள் மற்றும் வணிக வளாகத்தையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இத்திட்டத்தின் படி, 'www.onlineppa.tn.gov.in என்ற இணையதளத்தில் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். ஆன்லைன் மூலம் விண்ணப்பதாரர் அளிக்கும் விவரத்தின் அடிப்படையில் உடனடியாக அனுமதி வழங்கப்படும்.

விண்ணப்பதாரர்கள் சம்பந்தப்பட்ட எந்த அலுவலகத்துக்கும் செல்ல வேண்டியதில்லை. கட்டடப் பணிகள் முடிந்ததும், முடிவுச்சான்று பெறுவதில் இருந்தும் விலக்களிக்கப்படுகிறது. பரிசீலனைக் கட்டணம், கட்டமைப்பு, வசதிக் கட்டணங்களில் இருந்து 100 சதவீதம் விலக்களிக்கப்படுகிறது. 2500 சதுரடி வரையிலான மனையில், 3500 சதுரடியில் கட்டப்படும் வீடுகளுக்கு இத்திட்டம் பொருந்தும் என அறிவிக்கப்பட்டுள்ளது. வீடு அல்லது கட்டிடம் கட்டுவதற்கான திட்ட அனுமதி பெறுவது மிகவும் எளிதானதாகும். திட்ட அனுமதி பெறுதலில் உள்ள சங்கடம் மற்றும் கால தாமதம் ஆகியவை கடந்த கால செய்தியாகும். இப்போதுள்ள புதிய ஒழுங்கு முறையில், நீங்கள் திட்ட அனுமதியை விரைவில் பெறுவதை இத்திட்டம் உறுதி செய்துள்ளது. இதனால் நடுத்தர மக்களின், வீடு கட்டும் கனவு எளிதில் நனவாக வரப்பிரசாதமாக அமைந்துள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாள் விழா தொடர் 101 நிகழ்வாக நடைபெற்று வருகிறது. அதன்படி மாநகர விவசாய அணி தலைவர் முத்து ஏற்பாட்டில் டவுண் உழவர்சந்தை ஆதரவற்றோர் மனநலக்காப்பகத்தில் உள்ள முதியோர்களுக்கு மதிய உணவு வழங்கும் நிகழ்வு நெல்லை பகுதி செயலாளர் நமச்சிவாயம் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகரச் செயலாளர் சு.சுப்பிரமணியன் பங்கேற்று மதிய உணவு வழங்கினார். நிகழ்வில் அன்டன் செல்லத்துரை, அலிஃப் மீரான், ஸ்டார் முருகன், கேபிள் குமரேசன், சடாமுனி, சிவா, ஷெட்டி, உலகநாதன், செண்டு, குண்டு பாண்டியன், சங்கர் கணேஷ், பத்மநாதன், அந்தோணி ராஜ், சுப்ரித் சுப்பிரமணியன், வினோத், மணிகண்டன், பத்மா, சௌந்தரம், மேரி, பிந்து, ஆனி, ராஜேஸ்வரி, சித்ரா, மில் குமார், ராஜா அப்பாஸ், பாபநாசம், மாரிமுத்து உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை கிழக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நெல்லை கிழக்கு மாவட்டச் செயலாளர் இரா.ஆவுடையப்பனிடம்,பாளை வடக்கு ஒன்றிய பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள வேலன் குளம் எம்.கண்ணன் வாழ்த்துப் பெற்றார்.உடன் பாளை மத்திய ஒன்றியச் செயலாளர் போர்வெல் கணேசன், மாவட்ட வழக்கறிஞரணி அமைப்பாளர் ஜெ.செல்வ சூடாமணி, மாவட்ட பிரதிநிதிகள் முத்துசாமி, முத்துக்குட்டி, விவசாய அணி துணை அமைப்பாளர் முத்துராமலிங்கம், ஒன்றிய பொருளாளர் பேச்சிமுத்து, போர்வெல் சுபாஷ் ஆகியோர் உள்ளனர்.

### 58 ஆண்டுகளாக இருந்த தடையை நீக்கியது, ஒன்றிய பா.ஜ.க. கூட்டணி அரசு!

# அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.ஸில் இணைய எதிர்ப்பு!

## தடையை நீக்கிய ஒன்றிய அரசின் செயலுக்கு - எதிர்க் கட்சிகள் கடும் கண்டனம்!

**புதுடெல்லி, ஜூலை 24–**

**'அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்.ஸில் இணையலாம்' என, இதுவரை இருந்து வந்த தடையை நீக்கிய ஒன்றிய அரசின் செயலுக்கு எதிர்க்கட்சிகள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளன.**

**சமீபத்தில் மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்த மோடி தலைமையிலான ஒன்றிய தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ் அமைப்பில் சேருவதற்கு இருந்த தடையை நீக்கியுள்ளது குறித்து எதிர்க் கட்சிகள் குற்றம்சாட்டி வருகின்றன.**

அதன் விவரம் வருமாறு:

அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்வதற்கு தடை விதிக்கப்பட்டு இருந்தது. இந்தத் தடை நீண்ட காலமாக இருந்து வருகிறது. இந்த நிலையில் அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்ந்து செயல்படுவதற்கு விதிக்கப்பட்ட தடையை ஒன்றிய அரசு நீக்கியுள்ளது.

ஆர்.எஸ்.எஸ் உறுப்பினராக இருந்த நாதுராம் கோட்சே, மகாத்மா காந்தியை சுட்டு படுகொலை செய்ததாலும், தொடர் வன்முறைக் காரணங்களாலும் 1948ன் ஆரம்பத்தில், "நாடு இப்போது பெற்றிருக்கும் சுதந்திரத்தைச் சீர்குலைக்கும் ஆர்.எஸ்.எஸ் ஒரு சட்டவிரோத அமைப்பு" எனக் குறிப்பிடப்பட்டு, அப்போது உள்துறை அமைச்சராக இருந்த சர்தார் வல்லபாய் படேலால் தடை அறிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் சேர்வதற்கும், அதன் நிகழ்ச்சிகளில் பங்கேற்பதற்கும் 58 ஆண்டு காலமாக இருந்து வந்த தடையை மோடி தலைமையிலான ஒன்றிய பாஜக அரசு தற்போது நீக்கி அரசாணை வெளியிட்டுள்ளது. 1948 ஆம் ஆண்டு தேசப்பிதா மகாத்மா காந்தி சுட்டுக்கொல்ல ப்பட்டதன் எதிரொலியாக முதல் முறையாக தீவிர வலதுசாரி இந்துத்துவ அமைப்பான ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு சர்தார் வல்லபாய் படேல் தடை விதித்தார்.

சில காலங்களுக்கு பிறகு நன்னடத்தை பேரில் அந்தத் தடை நீக்கப்ப ட்டது. அதனைத்தொடர்ந்து 1966 வாக்கில் பசுக்கொலைகளுக்கு போராடுகிறோம் என்று வெகுஜன ஆதரவை ஆர்.எஸ்.எஸ். அமைப்பு திரட்டி போராட்டம் நடத்தத் துவங்கியது. இதன் உச்சமாக நாடாளுமன்றத்தில் பசுக்கொலைகளுக்கு எதிராக மாபெரும் போராட்டம் நடந்தது.

இதனைத்தொடர்ந்து அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி ஆர்.எஸ்.எஸ். அமைப்பில் அரசு ஊழியர்கள் சேரவும், அதன் நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் தடை விதித்தார். இடையில் ஆர்.எஸ்.எஸ். அமைப்பினோடு நெருங்கிய தொடர்புடைய பாஜக ஆட்சி அமைந்த போதும் பிரதமர் வாஜ்பாய் ஆர்.எஸ்.எஸ். மீதான இந்த தடையை நீக்காத நிலையில் தற்போது 3 வது முறையாக பிரதமர் ஆகியுள்ள மோடி தலைமையிலான பாஜக அரசு இந்த தடையை நீக்கி உத்தரவிட்டுள்ளது.

நடந்து முடிந்த மக்களவைத் தேர்தலுக்குப் பின் மோடி மீது ஆர்.எஸ்.எஸ். தலைவர்கள் அதிருப்தியில் இருப்பது சமீப காலமாக பொது வெளியில் அவர்களின் பேச்சில் இருந்து தெரிகிறது. இந்த விரிசலை சரி செய்யவே ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு இந்த உபகாரத்தை மோடி செய்து கொடுத்துள்ளதாக அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர். இதற்கிடையில் தடையை நீக்கியதற்கு காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

ஜூலை 18, 1948 அன்று ஹிந்து மகாசபா தலைவர் சியாமா பிரசாத் முகர்ஜிக்கு சர்தார் வல்லபாய் படேல் எழுதிய கடிதத்தில், "இந்து மகாசபாவின் தீவிரப் பிரிவினர் காந்தியைக் கொல்ல சதியில் ஈடுபட்டுள்ளனர் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை. ஆர்.எஸ்.எஸ்-ன் செயல்பாடுகள் அரசு மற்றும் அரசின் செயல்பாடுகளுக்கு தெளிவான அச்சுறுத்தலாக அமைந்திருக்கிறது. தடை விதிக்கப்பட்ட போதிலும் அந்த நடவடிக்கைகள் ஓயவில்லை என்பதை அறிக்கைகள் காட்டுகின்றன.

இது தொடர்பாக மதுரை எம்.பி., சு.வெங்கடேசன் தன் 'எக்ஸ்' பக்கத்தில், ஒன்றிய அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ். இயக்கத்தில் சேர அனுமதி மறுக்கப் பட்டிருந்தது. இப்பொழுது அனுமதி கொடுத்து உத்தர விடப்பட்டுள்ளது. சாவர்கரின் பிறந்த நாளில் புதிய நாடாளுமன்றத்தை திறந்து, அரசு ஊழியர்களை ஆர்.எஸ்.எஸ்.க்கு அனுப்பி வைக்கும் வேலையை துவக்கியிருக்கிற மோடி அரசுக்கு எனது கண்டனத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்." எனக் குறிப்பிட்டிருந்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ்

இந்த நிலையில், தற்போது காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் ஜெய்ராம் ரமேஷ் தன் 'எக்ஸ்' பக்கத்தில்,

"1948 பிப்ரவரியில் மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்ட பிறகு, சர்தார் வல்லபாய் படேல் ஆர்.எஸ்.எஸ் அமைப்பைத் தடை செய்தார். இதன்பின், தடை நீக்கப்பட்டது. ஆனால் தற்போதுவரை நாக்பூரின் ஆர்.எஸ்.எஸ். தலைமை இடத்தில் மூவர்ணக் கொடி ஏற்றப்படவில்லை. 1966ல் அதிகாரப்பூர்வமாக ஆர்.எஸ்.எஸ். நடவடிக்கைகளில் அரசு ஊழியர்கள் பங்கேற்கத் தடை விதிக்கப்பட்டது.

ஜூன் 4, 2024க்கு (தேர்தல் முடிவு) பிறகு, மனித நேயமற்ற பிரதமருக்கும் ஆர்.எஸ்.எஸ்க்கும் இடையேயான உறவில் விரிசல் ஏற்பட்டது. ஜூலை 9, 2024 அன்று, அடல் பிஹாரி வாஜ்பாய் பிரதமராக இருந்தபோது கூட நடைமுறையில் இருந்த, அரசு ஊழியர்கள் ஆர்.எஸ்.எஸ்ஸில் இணைவதற்கான 58 ஆண்டு தடை, தற்போது நீக்கப்பட்டிருக் கிறது." எனக் குறிப்பிட்டு, ஜூலை 9 அன்று பணியாளர் மற்றும் பயிற்சித் துறை (DoPT) பிறப்பித்த உத்தரவைப் பகிர்ந்துள்ளார்.



திருப்பத்தூர் நகரம் குள்ளாச்சாரி வட்டத்தில் ரூ.6.5லட்சம் மதிப்பீட்டிலான பல்நோக்கு கட்டிடத்தில் அ.நல்லதம்பி எம்.எல்.ஏ. பகுதி நேர நியாய விலைக் கடை துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் நகராட்சி ஆணையாளர் வி.நாராயணன் மற்றும் நகராட்சி அதிகாரிகள் கூட்டுறவு சங்க அதிகாரிகள் சு.அரசு, டி.சந்திரசேகர், ஏ.தேவராஜ், கஸ்தூரிரகு, கோமதி கார்த்திகேயன், எல்.சிவலிங்கம், எம்.ஜி.ராமச்சந்திரன் உள்ளிட்ட கழக முன்னோடிகளும் பொதுமக்களும் திரளாக கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### எஸ். பழனியப்பன்

**ஜூலை 24 (2014)**



**திராவிட இயக்கத்தில் துவக்க கால உறுப்பினராக இருந்தவர்.**

**உடுமலைப்பேட்டை நகரத்தில் வட்டச் செயலாளராக பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.**

**உடுமலைப்பேட்டை நகர்மன்ற உறுப்பினராக நான்கு முறை தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**இவர் கூட்டுறவு வங்கி – வீடுகட்டும் சங்கம் – ஆதிதிராவிடர் கூட்டுறவு நாணய சங்கம் போன்ற கூட்டுறவு சங்கங்களில் உறுப்பினராகவும், இயக்குநராகவும் பதவி வகித்தவர்.**

**கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**

**தி.மு.க.**